**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **122/2014** |
| | | D/W's | : | **Dw1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | பி. மோகன் | CASTE | : | |
| S/O | ம. பிச்சைசேர்வை | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | பாலமேடு | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **50** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2026**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் இந்த வழக்கில் பிரதிவாதி இல்லை. நான் பிரதிவாதியின் மகன் என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் எதுவும் படிக்கவில்லை.

2. எனது தகப்பனாரின் அப்பா பெயர் மருதன்சேர்வை, அம்மா பெயர் தாயம்மாள். எனது தகப்பனார் தற்போது பாலமேட்டில் வசித்து வருகிறார். பி.வா.சா.ஆ.4 ல் உள்ள பாலமேடு காவல் நிலைய குற்ற இறுதி அறிக்கையின்படி வாடிப்பட்டி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறதா என்றால், வழக்கு நடைபெறுகிறது. மேற்படி வழக்குக்கிற்காக போன மாதம் நீதிமன்றத்திற்கு வந்தேன், என்னுடன் ரவி, சோணை, செந்தில் மற்றும் வேலுச்சாமி ஆகியோர் வந்தோம்.

3. எனது தகப்பனார் மேற்படி வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு வரவில்லை. வேறு எந்த வழக்கிற்காகவும் எனது தகப்பனார் நீதிமன்றத்திற்கு வரவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், அதைப்பற்றி கேட்டால் சொல்வேன்.

**மேலும் குறுக்குவிசாரணை செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/-
M.P. ராம்கிஷோர்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

/// TRUE COPY///